**பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரியிம் - 2020**

---

## 1. அபிப்பிராயம்.

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரியின் 2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, கல்லூரியின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பதவிநிலைக் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். பதவிநிலைக் கல்லூரியை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல்

மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பதவிநிலைக் கல்லூரியின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கல்லூரியின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக கல்லூரி தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப்

பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வின் நோக்கெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாகப் பார்க்குமிடத்து, கல்லூரியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது கல்லூரியின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க கல்லூரி செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமத்தின் பிரகாரம் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹெய்யன்துடுவ இளைஞர் சேவை மன்றத்தின் 11 ஏக்கர் காணியில் கட்டிடம் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படாதிருந்த போதும், அந்த இடத்திற்குரிய சட்டபூர்வ உரித்தைப் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 வரை பெற்றிக்கவில்லை. | தற்சமயம் அக் காணியின் உரித்தைச் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் தெரிவிக்கப்படவில்லை. பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 87(2) பிரகாரம் நடவடிக்கை | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம வழிகாட் மற்றும் அறிவுறுத்தல் முகாமைத்துவத்தால் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 87 (அ) பிரகாரம் உரித்து வரவுக்குட்படுவதை நிதிக் கூற்றுக்களில் தெரிவிக்கவும் இல்லை. | எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்துக்கள் மீளப் பெறுமதியிடப்பட வேண்டுமாயினும், பதவி நிலைக் கல்லூரியின் ரூபா 1352.35 மில்லியன் பெறுமதியான காணியும் கட்டிடங்களும் கல்லூரியின் 2008 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்தும் மீளாய்வாண்டு வரை மீளப் பெறுமதியிடப்பட்டு சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாதிருந்தது. அவ்வாறே, சொத்துக்கள் மீளப் பெறுமதியிடப்படும் போது ஒரே வகையிலான சகல சொத்துக்களும் மீளப் பெறுமதியிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட வேண்டிய போதும், அதனைக் கருத்திற்கொள்ளாது ரூபா 388,277,669 கிரயமுடைய 2060 சொத்துக்கள் 2019 டிசெம்பர் 30 ஆந் திகதி மீளப் பெறுமதியிடப்பட்டிருந்தன. ஆயினும் தேய்மானம் முடிவடைந்த 207 பொருட்களது ரூபா 553,364,837 கிரயமுடைய ரூபா 33,477,246 பெறுமதியானவையே கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்த விலை மதிப்புத் திணைக்களம் 2019 இறுதியில் மதிப்பீட்டு அறிக்கையை வழங்கி உள்ளது எனினும், இக் காணி கட்டிடம் என்பன மதிப்பீடு செய்யப்படவில்லை. அதற்கமைய மீண்டும் விலை மதிப்புத் திணைக்களத்திற்கு அறிவித்து காணி, கட்டிடங்களை மதிப்பீடு செய்து கணக்கிலிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்துரைகள் முகாமைத்துவத்தால் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இராணுவத்தால் பதவி நிலைக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட ரூபா 1,735,000 பெறுமதியான பேன்ட் கிறூசர் ஜீப் 2020 ஒக்டோபர் 14 ஆந் திகதி இராணுவத்திற்கு திருப்பி வழங்கப்பட்டுள்ளது. எனினும், அந்த ஜீப் வண்டியின் பெறுமதி வாகன மற்றும் திரண்ட தேய்மானக் கணக்குகளிலிருந்து நீக்கப்படவில்லை. அதற்கமைய, கல்லூரியின் வாகனம் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,375,000 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இராணுவத்திற்குப் 181A 4641 இலக்க லேன்ட் கிறூகர் ஜீப் வண்டி 2020 ஒக்டோபரில் திருப்பி ஒப்படைத்ததை 2021 ஏப்ரல் நாட்குறிப்பின் மூலம் தீர்வு செய்யப்பட்டுள்ளது. | திருப்பி ஒப்படைக்கப்பட்டதும் மீளாய்வாண்டில் ஈடுபடுத்தப்படாததெனவும் நிதிக் கூற்றில் நீக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 டிசெம்பர் 16 ஆந் திகதியன்று கல்லூரிக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 1,246,900 பெறுமதியான கணனிகளும் துணைப்பாகங்களும் கணக்கிடப்பட்டு அவற்றுக்குரிய தேய்மானமும் கணக்குகளில் சீராக்கம் செய்யவில்லை. | 2021 ஏப்ரல் நாட்குறிப்பின் மூலம் காணிகளதும் துணைப் பாகங்களதும் குறிப்புகள் சீராக்கப்பட்டுள்ளன. | மீளாய்வாண்டில் பெறப்பட்ட சொத்துக்கள், பொறித் தொகுதி உபகரணம் என்பன நிதிக் கூற்றுக்களில் கணக்கிலிடப்பட வேண்டும். |
| (இ) | நடப்பாண்டின் டிசெம்பர் மாதத்திற்குரிய ரூபா 2,586,916 செலவினமானது சேர்ந்து நின்ற செலவினமாகக் கணக்கிலிடப்படவில்லை. அதற்கமைய மீளாய்வாண்டிற்குரிய கல்லூரியின் மீண்டுவரும் செலவினம் அதேயளவு குறைந்தும் மிகை அதேயளவு அதிகரித்தும் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தன. | சேர்ந்து நின்ற செலவினம் 2021 நாட்குறிப்பின் மூலம் சீராக்கல் செய்யப்பட்டது. | மீளாய்வாண்டினது சேர்ந்து நின்ற செலவினம் நிதிக்கூற்றுக்களில் நிரூபணம் ஆக வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 கொடுப்பனவு செய்ய வேண்டியன

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எரிபொருளைப் பெற்றமைக்காக இராணுவத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 10,992,853 தீர்வு செய்யப்படாது 5 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தது. | எரிபொருள் கொள்வனவுத் தொகையை பதிவழிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சினூடாக திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் இராணுவத்தால் இது பதிவழிக்கப்படும். அதற்கமைய குத்தொகையைப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுப்பனவு செய்ய வேண்டியவற்றை துரிதமாக வழங்குவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அரச நிதித் திணைக்களத்தின் PF/FD/04/198 இலக்க 2016 இடர்க்கடன் சனவரி 05 திட்டத்தின் பிரகாரமான கடன் வழங்கல் தொடர்பாக சுற்றறிக்கையோ, பிரமாணங்களோ தயாரிக்கப்படவில்லை. | கல்லூரியின் சிவில் பதவி பயிற்சியினருக்கான கடன் தொடர்பாக – பிரமாணங்களும் தயாரிக்கப்படவில்லை | இது தொடர்பாக குழு ஒன்று நியமிக்கப்பட்டு சுற்றறிக்கை வெளியிடவும் பிரமாணங்களைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | இடர்க்கடன் தொடர்பாக அரச நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 27,963,274 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பெறுபேறு ரூபா 14,159,390 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 13,803,883 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டின் சராசரி வருமானம் ரூபா 5,442,823 அதிகரித்தமை மற்றும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 9,473,756 குறைவடைந்தமை என்பன இந்த அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பதவி நிலையில் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளுக்காகத் தேவைப்படும் நான்கு மாடி விசால மண்டபமும் நூலக கட்டிடமும் நிர்மாணிக்கப்படுவதற்கு 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதியன்று ரூபா 115,878,415 பெறுமதியின் ஒப்பந்தம் ஒன்று ஒப்பந்தக் கம்பனி ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்டது. 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் கட்டிட வேலையைப் பூர்த்தி செய்தமைக்கான இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அக்கட்டிடத்தின் மேல் மாடியில் நீர் கசிவு ஏற்பட்டதால் கல்லூரி கொடுப்பனவை இடை நிறுத்தியிருந்தது. தற்சமயம் இடை நிறுத்தப்பட்டு 02 வருடங்கள் பூர்த்தியாகிய போதும் நீர்க் கசிவுக்கான பழுதுபார்த்தல் மீளாய்வாண்டு இறுதியிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நீர்க்கசிவை சீராக்குவதற்கு கல்லூரி நூலகத்தின் கட்டிட நிர்மாண வேலை லிங்க் இன்ஜினியரிங் தனியார் நிறுவகத்தால் நிர்மாணிக்கப்படுகின்றது. கட்டிடம் ஒப்படைக்கப்படுவதையடுத்து ரூபா 7.3 மில்லியனுக்கான இறுதி பில் நிறுத்தி வைத்த பணமாக வைத்துக் கொள்ளப்பட்டது. எனினும், பொறுப்புக் கூற வேண்டிய காலப்பகுதியில் நான்காம் மாடியிலிருந்து கீழ் மாடியில் கசிந்து மின்சாரப் பொருத்திகளைக் பாதித்துள்ளது. கீழ் மாடி பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளது. இந் நீர்க் கசிவை சீராக்குமாறு பல சந்தர்ப்பங்களில் கம்பனிக்கு அறிவிக்கப்பட்ட போதும், அது தொடர்பாக முறையான நடவடிக்கை அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக குறித்த நிறுவனத்தின் சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது. அதற்கமைய செயற்பட்ட பொறியியல் சேவை பணிப்பாளர் சபையால் தேவையான தொழில்நுட்ப மாதிரி வடிவமைப்பு வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கேள்வி கோரப்படவுள்ளது. மேலும், இது சம்பந்தமாக பொறியியல் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | பாடசாலையின் செயல் முன்னேற்றம் தொடர்பாக இறுதிக் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் மீளாய்வு செய்து குறைகள் இருப்பின் துரிதமாக அதனைச் சீராக்கவதற்கு வினைத்திறனுடனும் முறையாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் பதவி நிலைக் கல்லூரியின் ஆரம்ப மட்டத்திலான 18 வெற்றிடங்களும் இரண்டாம் தர பொறியியல் 6 மற்றும் மூன்றாம் நிலை வெற்றிடங்கள் 07 என பதவி வெற்றிடங்கள் நிலவிய போதும் அவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆரம்ப மட்ட பதவியணி ஆட்சேர்த்தலானது முகாமைத்துவச் சேவைகள் 2020 ஒக்டோபர் 20 இன் சுற்றறிக்கை 02/2020 இலக்கத்தின் பிரகாரம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், கல்லூரிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் நியமனத்தின் தன்மை தொடர்பான ஒத்துவராத தன்மையை சீராக்கவதற்கென முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பட்டுள்ளது. பிழையற்ற நியமனத் தன்மையை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் உறுதி செய்வதன் பின்னர் இரண்டாம் தரப்பதவி வெற்றிட ஆட்சேர்ப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான வெற்றிடங்கள் நிர்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |